[1972 மார்ச் 28

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அதற்கான முயற்சிகள் முறைப்படி மேற்கொள்ளப்படும். சில நாட்களுக்குமுன் அறிவிப்புகள் மேற்கொள்ள வேண்டும். முறைப்படி அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

Refresher Course in Engineering College, Guindy

* 748 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether it is a fact that a Refresher Course on Analysis and Design of Prestressed concrete structures is to be given at the Engineering College at Guindy, Madras, about November, 1971; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) முன் இறுக்கப்பட்ட காங்க்ரீட் வடிவங்களை பகுத்து ஆராய்வதற்கும், அவைகளை அமைப்பதற்கும் பொறியியலாளர்களுக்கும், கட்டடக் கலைஞர்களுக்கும் உதவியாக இருக்கும் பொருட்டு நான்கு வார காலம் நடைபெறும் மறுபயிற்சி ஒன்று கிண்டி பொறியியல் கல்லூரியில் 1971 நவம்பர் திங்களில் நடத்தப்பட்டது.

THIRU N. DENNIS : May I know whether persons both from private and public sector attended the course?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, தனியார் துறையிலேயும் 20 நபர்கள் எடுக்கப்பட்டார்கள். தனியார் துறையிலே இருப்பவர்களும் பங்குபெற்று நான்கு வார காலம் பயிற்சி பெற்று தங்கள் அறிவுத் திறனை வளர்த்துக் கொள்ளப் பயன்படுத்திக் கொண்டார்கள்.

பல்லவராயப்பேட்டை கோயிலில் பழைய கல்வெட்டுக்கள்

* 749 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம், பல்லவராயப்பேட்டை கோயிலில் பழைய கல்வெட்டுக்கள் இருப்பது உண்மையா ?

1972 மார்ச் 28]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : ஆம்.

முற்
பகல்
9.3

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, பல்லவராயப் பேட்டை கோயிலில் உள்ள பழைய கல்வெட்டுக்களின் மூலம், அந்தக் கோயிலுக்கு நிறைய சொத்துக்கள் இருந்தன என்று விவரம் அறிந்தவர்கள் சொல்லுகிறார்கள். அந்தச் சொத்துக்களை இப்போது தனிப்பட்ட பல பேர் அனுபவித்து வருவதாகச் சொல்லப்படுகிறது. இவற்றைப் பற்றிப் பரிசீலித்து தகுந்த நடவடிக்கை எடுக்க அரசு ஆவன செய்ய முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : 1924-ம் ஆண்டு அறிக்கையில் கொடுக்கப்பட்டுள்ளபடி அந்தக் கோயிலில் 23 கல்வெட்டுக்கள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. அந்தக் கல்வெட்டுகளில் சில விவரங்கள் காணப்படுகின்றன. குறிக்கப் பட்டுள்ள அரசர்கள் : சோழர், இரண்டாம் இராசராசன் ; ஊர் : இராசாதிராசன்குளத்தூர் ; ஊர்ப் பிரிவு : இராசாதிராசவளநாட்டு திருவிந்தளூர் நாட்டு குளத்தூர் ; கடவுள் பெயர் : இராச ராஜேச்சுரம் உடையார் ; கோயில் : இராசராஜேச்சுரமுடையார் கோயில்.

இக்கோயிலுக்கு நந்தா விளக்கு எரிக்க ஆடு கொடையாகக் கொடுத்ததும், கோயில் பூஜைக்கும் திருவிழாக் காலத்திலும் அன்றாடச் செலவுக்கும் நிலம் கொடையாக அளித்ததையும், சோழ அரசுக்கு ஒருவன் வரி செலுத்தாமையால் அவன் மனைவி, மகன் சொத்துக்களை அரசு எடுத்து விற்று அவற்றை இக்கோயிலுக்கு கொடையாக அளித்ததையும், இராசராஜேச்சுரம் உடையார் கோயிலுக்கு குலுத்தோங்க திருச்சிற்றம்பல உடையான் பெருமாள் நம்பியார் என்ற பல்லவரையர் வழிபாட்டிற்கும், பூஜைக்கும் நந்தவனம் வைக்கவும் கொடையாக நிலம் வழங்கியதையும், மாப்படுகை என்ற அழகிய சதுர்வேதி மங்கலத்தால் பொது ஏலத்தில் (இராசராசப் பெருவில்) வாங்கிய நிலத்தை, இவர்களும் பொது மக்களும் சேர்ந்து ஐம்பது காசுக்கு இராசாதிராச வளநாட்டு, நாங்கூர்நாட்டு நாங்கூர் சபையாரால் இக்கோயில் இறைவன் திருவேட்டை திருநாளில் சோலையில் அமர்ந்திருக்கும் பொழுது படைப்பதற்கு ஊர்கீழ் இறையிலியாக (வரி நீக்கி) அளிக்கப்பட்ட நிலக் கொடையையும் குறிக்கின்றன.